# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0647/TPT/2016

ஆணை எண்: 013 /2017

நாள்: 25/01 /2017

பி. சோமசுந்தரம்,
சோமூஸ் பிராப்பர்ட்டிஸ்,
க.எண்.509/P–3, ரெட்ரோஸ் பிளாசா,
3வது தளம், D.B.ரோடு, R.S.புரம்,
கோயம்புத்தூர் – 641 002. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கருமத்தம்பட்டி பேரூராட்சி,
சோமனூர்,
கோயம்புத்தூர் – 641 668. – எதிர் மனுதாரர்

முறையீட்டு மனுதாரரான திரு. பி. சோமசுந்தரம் அவர்களின், 2.5.2014ம் தேதியிட்ட மனுவில் கருமத்தம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி முன்னாள் தலைவர் ஆகியோர் மீது புகார் தெரிவித்து தமிழ்நாடு தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட 2.5.2014 நாளிட்ட மனுவானது, பேரூராட்சிகளின் இயக்குநரால், ந.க.எண்.9662/2014/இ1, நாள்:1.7.2016 வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, இம்முறைமன்றத்தால் 6.7.2016 அன்று பெறப்பட்டது.

2. இந்நிகழ்வு அரசால் இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (1) ன்படி தாக்கல் செய்யப்பட்ட முறையீடாகக் கருதி, மேற்படி முறையீட்டு மனுதாரரின் மனு முறையீடு எண்.647/2016-ஆக பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை:-

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தனக்கு சொந்தமான சோமு பிராபர்டீஸ் என்ற நிறுவனம் மூலம் கடந்த 20 வருடங்களாக நிலம் வாங்கி, மனைப் பிரிவு (lay out) தயார் செய்து நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரகத்தின் அனுமதி பெற்று மனைகள் விற்பனை செய்து வருவதாகவும், அவ்வாறே, கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கருமத்தம்பட்டி கிராமத்தில் 47.16 ஏக்கர் நிலத்தில் மனை பிரிவு செய்து 16.12.2013 அன்று கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டது என்றும், இதற்கிடையில் கருமத்தம்பட்டி பேரூராட்சி தலைவர் ஏ.சி. மகாலிங்கம் மற்றும் செயல் அலுவலர் திரு. ஜெகதீசன் ஆகியோர்கள், அவர்களுடைய அலுவலக உதவியாளர் மூலம் 16.02.2014 அன்று பேரூராட்சி அலுவலகத்திற்கு அழைத்து, மேற்படி மனை பிரிவிற்கு, அரசு ஆணை எண்.59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.7.2006ன் படி, பேரூராட்சியின் தலைவருக்கு இம்மனைப் பிரிவிற்கு ஒப்புதல் வழங்க அதிகாரம் உள்ளது என தெரிவித்து அவ்வாறு ஒப்புதல் வழங்க அலுவலக செலவு தவிர்த்து செண்ட் ஒன்றிற்கு ரூ.10,000/- வீதம் 3000 செண்டிற்கு ரூ.3 கோடி (மூன்று கோடி) கொடுக்கவேண்டும் என தெரிவித்ததாகவும், அதற்கு தான் உடனடியாக மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பணம் கொடுக்க மறுத்ததின் காரணமாக, அவர்கள் தன்னை தகாத வார்த்தையில் பேசி பயமுறித்தினார்கள் என்றும், மேலும் தங்களுடைய மனைபிரிவு (லே அவுட்) பேரூராட்சியில் ஒப்புதல் பெறப்படவில்லை எனவும், இதுபோன்ற மனை பிரிவுகளை பொது மக்கள் வாங்கி ஏமாறவேண்டாம் எனவும், இதுபோன்ற மனை இடங்களுக்கு கட்டிட அனுமதி, குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் பேரூராட்சியால் செய்து கொடுக்கப்படமாட்டாது எனவும் 22.02.2014 தேதிய தினந்தந்தி நாளிதழில் செயல் அலுவலர் உயர் அதிகாரிகளின் அனுமதி ஏதும் பெறாமல் விளம்பரம் செய்ததாகவும், மேலும், மேற்காண் செயலுக்காக, பேரூராட்சி தலைவர் திரு. A.C. மகாலிங்கம் மற்றும் செயல் அலுவலர் திரு.ஜெகதீசன் ஆகியோர்கள் மீது விசாரணை செய்ய கோயம்புத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் (Judicial Magistrate-II) வழக்கு தொடுத்து, அதன்பேரில் நீதிமன்றம், கருமத்தம்பட்டி பேரூராட்சி தலைவர் திரு. A.C. மகாலிங்கம் மற்றும் செயல் அலுவலர் திரு.ஜெகதீசன் ஆகியோரை விசாரித்து நடவடிக்கை எடுக்க கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளருக்கு அறிவுறுத்தியதின் பேரில், கருமத்தம்பட்டி காவல் ஆய்வர் விசாரித்து, அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (எண்:115/2014) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் அலுவலக பதவியை தவறாக பயன்படுத்தி, தன்னை மிரட்டுகிறார்கள் எனவும் தெரிவித்து, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இப்புகார் மனு மீது முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.647/பேரூராட்சி/2016 நாள்:11.11.16 வாயிலாக 15.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் ஆஜராகவில்லை. மேலும், இப்புகார் மனு தொடர்பாக முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்:647/பேரூ./2016, நாள்:11.11.2016ன் வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

3. கருமத்தம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர், தனது 12.12.2016 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்:-

"முறையீட்டு மனுதாரருக்கும் கோவை டயாஸிஸ் சொஸைட்டி மற்றும் பிறருக்கான சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதாக முறையீட்டுதாரரே அவரது 16.10.2014 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை அனைத்தும் பொய்யானது, உண்மைக்குமாறானது. மனுதாரரே 46.17 ஏக்கர் நிலத்தில் மனைப்பிரிவு செய்ய அனுமதி வேண்டி கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமத்திற்கு விண்ணப்பித்துள்ளார். பேரூராட்சிக்கு விண்ணப்பம் செய்யவில்லை. இந்த விவரங்கள் ஏதும் பேரூராட்சிக்கு தெரியாது. மனுதாரரை 16.02.2014 அன்று முன்னாள் செயல் அலுவலர் ஜெகதீசன் அவர்களும் முன்னாள் பேரூராட்சி தலைவர் திரு.ஏ.சி. மகாலிங்கம் அவர்களும் மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க ரூபாய் 3 கோடி (மூன்று கோடி) கேட்டதற்கு பேரூராட்சி அலுவலகத்தில் ஆதாரமாக ஆவணங்கள் ஏதுமில்லை.

அரசு ஆணை எண்.59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ——— நாள்: 25.7.2006ன் படி, அங்கீகரிக்கப்படாத மனைகளுக்கு சதுர அடிக்கு ரூபாய் ஒன்று வீதம் வளர்ச்சிக் கட்டணம் (development charge) வசூலித்துக் கொண்டு மனைப்பிரிவிற்கு பேரூராட்சியால் ஒப்புதல்/அங்கீகாரம் வழங்கலாம். அந்த அரசாணை ஒரு வருடத்திற்கு மட்டுமே பொருந்தும். எனவே மேற்கண்ட அரசாணையின்படி, மனுதாரரின் மனைப்பிரிவிற்கு அப்போதைய செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி தலைவர் ஆகியோர்களால் ஒப்புதல் வழங்க இயலும் எனக் கூறியது கற்பனையானது.

கருமத்தம்பட்டி முன்னாள் செயல் அலுவலரோ அல்லது முன்னாள் பேரூராட்சி தலைவரோ மேற்கண்ட மனை பிரிவிற்கு ஒப்புதல் அளிக்க ரூபாய் 3 கோடி முறையீட்டு மனுதாரிடம் கோரிய விபரம் ஏதும் எனக்கு தெரியாது. மேலும் அங்கீகரிக்கப்படாத மனைகளை வாங்கவேண்டாம் என பொது மக்களுக்கு நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்ய உயர் அதிகாரிகளின் முன் அனுமதி தேவையில்லை. இப்பொருள் தொடர்பாக முறையீட்டு மனுதாரர், முன்னாள் செயல் அலுவலர் திரு. சிவசாமி மற்றும் முன்னாள் பேரூராட்சி தலைவர் திரு. A.C. மகாலிங்கம் ஆகியோர்களை விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் குற்றவியல் நடுவர் (Judicial Magistrate) நீதிமன்றம் IIல் வழக்கு தொடர்ந்து, அதன்பேரில் நீதிமன்றம் C.M.P. No.1683/2014—ல், தனது 17.3.2014—ந் தேதியிட்ட ஆணையில் மேற்படி நபர்கள் மீது விசாரணை செய்ய கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளருக்கு ஆணையிட்டது. அதனை தொடர்ந்து முன்னாள் தலைவர் திரு. A.C. மகாலிங்கம் மற்றும் முன்னாள் செயல் அலுவலர் திரு. சிவசாமி ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை எண்.115/2014 பதிவு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. ஆனால் முறையீட்டுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகாரில் முன்னாள் பேரூராட்சி தலைவர் A.C. மகாலிங்கம் மற்றும் முன்னாள் செயல் அலுவலர் திரு. ஜெகதீசன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். அதிலிருந்து முறையீட்டுதாரர், அனுப்பிய முறையீட்டு மனுவில் திரு. சிவசாமி அவர்களின் பெயரை வேண்டுமென்றே மறைத்து, உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

முறையீட்டு மனுதாரரின் மேற்படி புகார் குறித்து வழக்கு (கோயம்புத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்-II ) எண். C.M.P.No.1683/2014 மற்றும் முதல் தகவல் அறிக்கை கிரைம் எண்.115/2014, O.S.No.3376/2013ல் கோயம்புத்தூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளதால் இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்."

4. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் கருமத்தம்பட்டி செயல் அலுவலரின் மேற்படி விளக்க அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் 15.12.2016 அன்று நிர்ணயிக்கப்பட்ட இம்முறை மன்ற விசாரணைக்கு வருகை தந்து, புகார்களை நிரூபித்திருக்க வேண்டும். ஆனால் முறையீட்டு மனுதாரர் அவ்வாறு செய்யவில்லை. முறையீட்டு மனுதாரர் இம்முறை மன்றத்திற்கு அனுப்பிய புகாரில் முன்னாள் செயல் அலுவலர் திரு. ஜெகதீசன் அவர்களும் முன்னாள் பேரூராட்சி தலைவர் திரு. A.C. மகாலிங்கம் அவர்களும் மனைப்பிரிவு ஒப்புதல் செய்ய ரூபாய் மூன்று கோடி கேட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் கோவை நீதிமன்றத்தில் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சிவசாமி மற்றும் தலைவர் திரு. A.C. மகாலிங்கம் ஆகியோர் மீது குற்றம் சுமத்தி வழக்கு தொடுத்து, அவர்களை விசாரிக்க ஆணை பெற்றுள்ளார். இதிலிருந்து முறையீட்டுதாரர் உண்மையானத் தகவல்களைத் தெரிவிக்கவில்லை என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. மேலும் இப்புகார் தொடர்பான வழக்கு எண்.CMP No.1683/2014 மற்றும் முதல் தகவல் அறிக்கை கிரைம் எண்.115/2014 in O.S.No.3376/2013 கோயம்புத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் மூலமாக அறிய முடிகிறது. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10, உட்பிரிவு (3) (b)ன் படி, இம்முறைமன்ற நடுவர், நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் விசாரணை செய்தல் கூடாது. எனவே, இப்புகார் தொடர்பான பொருட்பாடு ஏற்கனவே கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், திரு. பி. சோமசுந்தரம் அவர்களின் முறையீட்டு மனுவின் மீது மேல்நடவடிக்கை ஏதும் தேவையில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. பி. சோமசுந்தரம்,
   சோமூஸ் பிராப்பர்ட்டீஸ்,
   க.எண்.509/P–3, ரெட்ரோஸ் பிளாசா,
   3வது தளம், D.B.ரோடு, R.S.புரம்,
   கோயம்புத்தூர் – 641 002.
2. செயல் அலுவலர்,
   கருமத்தம்பட்டி பேரூராட்சி,
   சோமனூர், கோயம்புத்தூர் – 641 668.